பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**31 08 2026** **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. மேற்காசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் சாதனை வளர்ச்சிக்கு காரணம் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. இரண்டாம் கட்ட செமிகண்டெக்டர் திட்டத்திற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

4. **Sone** நதிநீர் பங்கீட்டிற்கான ஒப்பந்தத்தில் பீகாரும், ஜார்கண்டும் கையெழுத்திட்டுள்ளன.

5. உலகக்கோப்பை **Picklepall** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Kiaan Contractor** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் -

<<<<<<<>>>>>>>

மேற்காசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக கிர்கிஸ்தான் சென்றுள்ள பிரதமர் இன்று **Bishkek**-ல், ஈரான் அதிபர் திரு **Masoud Pezeshkian**-னுடன் பேச்சு நடத்தினார்.

ஈரான் உடனான நல்லுறவு வலுப்படுத்தப்படும் என்றும் இந்த பேச்சுக்களின்போது திரு நரேந்திர மோடி கூறினார்.

இதன்பின்னர், கிர்கிஸ்தான் அதிபர் திரு **Sadyr Zhaparov**-வுடன் பிரதமர் பேச்சு நடத்தினார்.

சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், பாதுகாப்பு, வேளாண்மை, கட்டமைப்பு, விளையாட்டு. சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் சாதனை வளர்ச்சிக்கு காரணம் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இந்த சாதனைக்கு நாட்டு மக்களின் பங்களிப்பும் இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

இரண்டாம் கட்ட செமிகண்டெக்டர் திட்டத்திற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 1 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

சிப் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்கு இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

செமிகண்டெக்டர் துறையில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த நான்காண்டுகளுக்குள் 85 ஆயிரம் செமிகண்டெக்டர் பொறியாளர்கள் உருவாக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>>>

எரிசக்தித்துறையில் கத்தார் உடனான ஒத்துழைப்பு வலுவாக உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

கத்தாருக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய தூதர் டாக்டர் **K. Srikar Reddy**-யுடன் பேச்சு நடத்திய பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே திரவ எரிவாயுக்கான ஒப்பந்தம் **20** ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<<<<>>>>>>>

இளையோருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்குரிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு ஹெச் டி குமாரசாமி வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் வாகனத்துறை திறன் மேம்பாட்டுக் குழுமத்தின் வருடாந்திர மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

வாகன உற்பத்தித்துறையின் உலகளாவிய முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் நடத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுவரை 5 லட்சத்திற்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழகம் உட்பட 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் முதற்கட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

தில்லியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு பின்னர் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

47 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பான முறையீட்டு விண்ணப்பங்களை அடுத்த மாதம் 30 ஆம் தேதி வரை தாக்கல் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் நவம்பர் மாதம் 4 ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் மீன்வளத் துறையின் வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்கும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று லட்சத்தீவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடல்வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மீன்வளத் துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

**Sone** நதிநீர் பங்கீட்டிற்கான ஒப்பந்தத்தில் பீகாரும், ஜார்கண்டும் கையெழுத்திட்டுள்ளன.

புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்மூலம், நதிநீர் பங்கீடு தொடர்பாக நீண்டகாலம் நீடித்து வந்த பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

தகுதியான குடும்பத்தினருக்கு மட்டுமே கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் இதற்கான திட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று மத்திய — மாநில அரசுகளுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு கிருஷ்ணசாமி கோவிந்தராஜன் அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

அரசு பணி நியமனங்கள் அனைத்தும் அரசியல் சாசன விதிகளின் படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய தகுதியின்றி இடஒதுக்கீட்டையும் பின்பற்றாமல் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்படுவது அரசியல் சாசன பிரிவுகளுக்கு எதிரானது என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

குஜராத்தில் உலக முதலீட்டாளர்களின் மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் **10** ஆம் தேதி தொடங்கி **12** ஆம் தேதி வரை நடைபெறும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு புபேந்திர பட்டேல் அறிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மாநாடு காந்திநகரில் நடைபெறவுள்ளதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் குஜராத் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு வலுசேர்க்கும் வகையில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக திரு புபேந்திர பட்டேல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மேற்குவங்கத்தில் கூட்டுறவு அமைப்புகள் வலுப்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு சுவேந்து அதிகாரி கூறியுள்ளார்.

**Madhyamgram-**ல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் கூட்டுறவுத் துறை முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

இதனை கருத்தில்கொண்டு, அதனை வலுப்படுத்த கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு சுவேந்து அதிகாரி தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>>

மணிப்பூரில் நாளை தொடங்குவதாக இருந்த மக்கள் தொகை கணக்கெடுப்புப்பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மணிப்பூர் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இப்பணிகளின் முதல் கட்டமாக வீடுகளை கணக்கெடுக்கும் பணிகள் நாளை தொடங்குவதாக இருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

ராஜஸ்தானிலிருந்து ஆன்மீக சுற்றுலா சென்றவர்களின் வாகனம் உத்தரபிரதேசத்தின் **Kasginj-**ல் எதிரே வந்த லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<<<>>>>>>>

ஒடிசா மற்றும் சத்தீஷ்கட் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பீகார், உத்தரப்பிரதேசம், உத்ராகண்ட், மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நாளை வரை கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

ஆந்திரா, மேற்கு வங்கம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>>

உலகக்கோப்பை **Picklepall** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Kiaan Contractor** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், 6 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 8 ஆவது இடத்தில் உள்ளது.

-------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் சிரியாவை வென்றது.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் 86-ஆவது நிமிடத்தில், Shami Singamayum கோல் அடித்தார்.

------------

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் வாள்வீச்சு பிரிவில் பங்கேற்பதற்கான இந்தியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பவானி தேவி தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இதேபோல், துப்பாக்கிச்சுடும் பிரிவில் பங்கேற்பதற்கான இந்திய அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மனுபாக்கர் தலைமையிலான இந்த அணியில் இளவேனில் வாலறிவன் உட்பட 30 பேர் இடம்பெற்றுள்ளனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஜப்பானில் வரும் 17-ஆம் தேதி தொடங்கி, அக்டோபர் மாதம் 3-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

--------------

இந்திய விமானப்படையின் சர்வதேச ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி சண்டிகரில் இன்று தொடங்கியது.

இந்தியா, இலங்கை, இங்கிலாந்து உட்பட ஆறு நாடுகளை சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

----------------

எகிப்தில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 6-2, 6-3 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் **Aaron Funk**-ஐ வென்றார்.

**<<<<<<<<END>>>>>>>>**